# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 75 — 1973 අගෝස්තු 31 වැනි සිකුරාදා — 1973.08.31

75 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்டசம்பந்தமானது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மசோதா .. .. .. .. | — | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் .. .. | — |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் .. | — | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| உச்சமன்ற அறிவித்தல்கள் .. | — | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் . .. | — |
| உச்சமன்ற குற்றவிசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் .. .. | — |
| மாவட்ட மன்ற, சிறிய மன்ற அறிவித்தல்கள் .. | — | நொத்தாரிசுமார் நிரல் .. .. . | — |
| கடனிறுக்க முடியாமைக்காய வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — | நாணுவிதம் .. .. .. | 41 |


**கவனிக்க.**—மகானுவர பௌத்த இளைஞர் கழகம் சட்ட மூலம் 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆம் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## நாணுவிதம்

### தேவ் சுவ சேவாவ என்றழைக்கப்படும் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

திருமதி ஜெ. பி. ஒபயசேகர ஆகிய யான் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் 52 ஆம் இலக்க நிலையற் கட்டளையின் கீழ் " தேவ் சுவ சேவாவ என்றழைக்கப்படும் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம் " எனப்படும் ஒரு சட்டமூலத்தை மேற்குறித்த தேசிய அரசுப் பேரவையில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

பின்வரும் நோக்கங்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் குறிக்கோளாகும் :—

(அ) (i) உடல், உளம், ஆன்மா ஆகியவற்றில் நோயுற்றுள்ள மக்களைக் கவனித்தல், நிவாரணமளித்தல், நோய் தீர்த்தல் ஆகியவற்றுக்கும்,

(ii) வெறிமயக்கப் பொருள்களைப் பயன்படுத்தும் பழக்கம் கொண்டவர்களையும், அல்ககோல் பயன்படுத்தும் பழக்கம் கொண்டவர்களையும் அவற்றைப் பயன்படுத்தலிலிருந்து மீட்டற்கும் நோய் தீர்க்கும் தருமத் தாபனம் ஒன்றைத் தாபித்தலும்,

(ஆ) மருத்துவ உளநோய் மருத்துவ, ஆன்மீக முறைகளையும் வளன்களையும் பயன்படுத்தி அதாவது வைத்தியர்கள், உளநோய் மருத்துவர்கள், போதகர்கள், வேறு ஆளணியினர் என்போரின் சேவைகளை ஈடுபடுத்துவதன் மூலமும் உடல் உளம் ஆன்மா ஆகியவற்றின் நோய் தீர்ப்பதில் ஒருவர் மற்றவரின் ஆற்றல்களுக்கு நிறைவேற்படுத்தி ஒரு கூட்டத்தினராக ஒன்றுசேர்ந்து வேலை செய்யச் சந்தர்ப்பம் அவர்களுக்கு அளிப்பதன் மூலமும் மனித முழுமையை மீட்டளிக்க உதவுதலும்,

என்பனவாம்.

ஜே. பி. ஒபயசேகர, பா.உ.,
மீரிகம.

8–1231—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்,

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஓகத்து** .. | **3.8.73** | வெள்ளி .. | **27.7.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **10.8.73** | வெள்ளி .. | **3.8.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **17.8.73** | வெள்ளி .. | **10.8.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **24.8.73** | வெள்ளி .. | **17.8.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **31.8.73** | வெள்ளி .. | **24.8.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| **செத்தெம்பர்** .. | **7.9.73** | வெள்ளி .. | **31.8.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **14.9.73** | வெள்ளி .. | **7.9.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **21.9.73** | வெள்ளி .. | **14.9.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |
| | **28.9.73** | வெள்ளி .. | **21.9.73** | வெள்ளி .. | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது